(அ) அந்தியூர் தொகுதியில் அத்தாணி அரசினர் மாணவர் இல்லத்திற்கு இல்லக் காப்பாளர் நியமிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் பணியிடம் நிரப்பப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் அத்தாணி அரசினர் மாணவர் இல்லத்திற்கு இல்லக்காப்பாளர் நிய்மிக்கப்பட்டு, காப்பாளர் பணியாற்றி வருகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காப்பாளர் நியமிக்கப்பட்டு விட்டார் என்று அமைச்சர் சொல்லுகிறாரே.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டபோது நியமனம் செய்யப்படாமல் இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கனிவான வார்த்தைகளால் அந்தப் பகுதிக்கு இல்லக் காப்பாளர் நியமனம் செய்யப்பட்டுவிட்டார் என்று சொன்னார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த விடுதிக்கு கட்டிட வசதி இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான கட்டிடத்தை எப்போது கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்கள் என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும். இல்லக் காப்பாளர்பற்றிக் கேட்டுவிட்டு, கட்டிடத்திற்குப் போனால் எப்படி?

வினா எண் 480, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

480—

இராட்டைகளைப் பழுதுபார்த்தல்

***33334—**டாக்டர் பெ. வீரபாண்டியன் :*

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 27]

(அ) செங்கம் தொகுதி, பரமனந்தல் கிராமத்தில் "தாட்கோ" கட்டிடத்தில் இயங்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கிராமிய நூற்பு நிலையத்தில் 25 மெரிகோட்ஸ் பழுது அடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மெரிகோட்ஸ்களை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி பரமனந்தல் கிராமத்தில் "தாட்கோ" கட்டிடத்தில் இயங்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய நூற்பு மையத்தில் பழுதடைந்த 25 இராட்டைகள் தற்சமயம் பழுது நீக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கிவருகின்றன.

டாக்டர் பெ. வீரபாண்டியன், : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமனந்தல் கிராமத்தில் உள்ள கிராமிய நூற்புமையம் ஜவ்வாது மலையினுடைய அடிவாரத்தில் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன்னால் போடப்பட்ட கேள்வி இது. அதற்கு முன்னால் 25 "மெரிகோட்ஸ்" (இராட்டை) ஒரு வருடமாக பழுதடைந்து இருந்தது. அங்கே, பெரும்பாலும், ஆதிதிராவிட பெண்களும், மலைவாழ் பெண்களும்தான் பணி செய்கிறார்கள். இவ்வாறு பழுதடைந்தவுடன், உடனுக்குடன் அந்த பழுதை நீக்கி, ஒரு உப தொழிலாக கிராமிய நூற்புமையம் அந்தத் தாய்மார்களுக்கு அமையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தக் கேள்வியை நான் கொடுத்திருந்தேன். இராட்டைகளைப் பழுதுபார்த்ததற்கு அரசுக்கு நன்றி. அங்குள்ள தாட்கோ கட்டிடத்தில் பரமனந்தல் கிராமத்தில் கிட்டத்தட்ட 300 முதல் 400 மெரிகோட்ஸ் (இராட்டை) இயந்திரங்களை வைக்கலாம். அவ்வளவு பெரிய இடம் அங்கே இருக்கிறது. இப்போது 25 இராட்டைகள்தான் அங்கே இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆதிதிராவிட மக்களுடைய நன்மையைக் கருதி, இன்னும் 25 மெரிகோட்ஸ் பரமனந்தல் தாட்கோ கட்டிடத்தில் அமைத்துத்தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் நூற்பு மையங்கள் அமைக்கப்படும்போது 25 ராட்டைகள் கொண்டுதான் அமைக்கிறோம். அந்தப் பகுதியிலே

இருக்கக்கூடிய பெண்களுடைய வருகையை முன்னிட்டு, அங்கு இருக்கக்கூடிய ஏழை மக்களுடைய வாழ்வுக்கு அது எந்த அளவு பயன்படுகிறது, எந்த அளவு அந்த கிராம மக்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள் என்பதை ஆராய்ந்து, அதற்குப் பிறகு அதன் தேவைக்கு ஏற்ப விரிவாக்கம் செய்து வருகிறோம். அதன் அடிப்படையிலே இந்த ஆண்டு 20 நூற்பு மையங்கள் விரிவாக்கம் செய்யப்பட இருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைக் கனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமிய நூற்பு நிலையம் செங்கம் தொகுதியில் காளம்பட்டு, பரமனந்தல், தோக்கவாடி, குயிலம் ஆகிய கிராமங்களிலே இருக்கிறது. அங்கே ஒரே ஒரு பெண் சூப்பர்வைசர்தான் பணியமர்த்தப்பட்டிருக்கிறார். அவர் மாதத்திற்கு ஒருமுறை கூட ஒவ்வொரு நிலையத்திற்கும் சென்று பயிற்சி அளிக்க முடியவில்லை. எனவே, இன்னொரு மேற்பார்வையாளரை தாங்கள் நியமிக்க ஆவன செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானியக் கோரிக்கைக்கான பதிலிலே விளக்கமாகக் கூறியிருக்கிறேன். பயிற்சி நிலையங்கள் அமைப்பற்கு வருகின்ற நிதி ஆண்டில் வாய்ப்பு உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

465—

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கூட்டு முயற்சி

***35122**—திரு. மா. சுந்தரதாஸ்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஒரு கூட்டு முயற்சியாக சம அளவில் பங்கேற்கும் வகையில் உலக அளவில் ஒப்பந்தப்புள்ளிகளை சமீபத்தில் கோரியுள்ளதா ?

(ஆ) அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இக்கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.